வகுப்பு : 12 — ஒரு மதிப்பெண் தேர்வு – 3 — மதிப்பெண்கள்: 40

தமிழ் — காலம் : 45 நிமிடங்கள்

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 40 x 1 = 40

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ____.
   அ)அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ). நிதியமும் சுங்கமும்
2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க:
   அ) உரிமைத்தாகம் - 1. பாரசீகக்கவிஞர்
   ஆ) அஞ்ஞாடி - 2. பூமணி
   இ) ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி
   ஈ) தமிழர் குடும்பமுறை - 4. சாகித்திய அகாதெமி
   அ) 2,43,1 ஆ) 3,4,1,2 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ)வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
4. உவா உற வந்து கூடும்
   உடுபதி, இரவி, ஒத்தார்" – யார் யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
   சக்தி பிறக்குது மூச்சினிலே " – என்னும் பாரதியாரின் பாடல் வெளிப்படுத்துவது.
   அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை
   இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தைவழிச் சமூக முறை
6. பொருத்துக:
   அ) தாழ்கடல் - 1. நும் தந்தை என்பதன் மரூஉ
   ஆ) நுந்தை - 2. வினைத்தொகை
   இ) செற்றவர் - 3. உரிச்சொற்றொடர்
   ஈ) மாதவம் - 4. வினையாலணையும் பெயர்
   அ) 4,3,2,1 ஆ) 2,1,4,3 இ) 2,1,3,4 ஈ) 3,4,2,1
7. குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை __ அ) தொழில் ஆ) கல்வி இ) திருமணம் ஈ) சமூகம்
8. குடும்பம் என்ற சொல் முதன்முதலில் இடம்பெற்ற நூல் ____________.
   அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம் இ) கம்பராமாயணம் ஈ) புறநானூறு
9. சங்க இலக்கியத்தில் 'குடம்பை' என்ற சொல் ____________ இடங்களில் பயின்று வருகிறது.
   அ) பதினைந்து ஆ) பத்து இ) ஒன்பது ஈ) இருபது
10. 'யாவரும் கேளிர்' என்பது
    அ) உயிர்ப்பண்பின் முதிர்ச்சி ஆ) நற்பண்பின் மலர்ச்சி
    இ) தமிழர் நற்பண்பின் வளர்ச்சி ஈ) தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி
11. பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன் யார்?
    அ) இராமன் ஆ) குகன் இ) சுக்ரீவன் ஈ) வாலி
12. "என்உயிர் அனையாய் நீ
    இளவல் உன் இளையான்;" - யார் யாரிடம் கூறியது?
    அ) இராமன் - குகனிடம் ஆ) இராமன் - சுக்ரீவனிடம் இ) இராமன் - வாலியிடம் ஈ)இராமன் - சவரியிடம்
13. கம்பர் தம் நூலுக்கு இட்ட பெயர் ____________.
    அ) இராமவதாரம் ஆ) இராமாயணம் இ) கம்பராமாயணம் ஈ) தசாவதாரம்
14. கம்பர் வாழ்ந்த காலம் _______நூற்றாண்டு அ) 9 ஆ) 12 இ) 8 ஈ) 16
15. கம்பராமயணத்தில் இடம்பெற்றுள்ள காண்டங்கள் _____அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) மூன்று
16. பொருத்துக:
    அ) வேடன் - 1. சடாயு
    ஆ) பறவை - 2. குகன்
    இ) எளியமுதியவள் - 3. வாலி
    ஈ) வானரம் - 4. சவரி
    அ) 2,1,3,4 ஆ) 4,2,1,3 இ) 4,3,2,1 ஈ) 2,1,4,3
17. பொருத்துக:
    அ) கிளை - 1. சந்திரன்
    ஆ) இளவல் - 2. தம்பி
    இ) உன்னேல் - 3. உறவினர்
    ஈ) உடுபதி - 4. எண்ணாதே
    அ) 3,2,4,1 ஆ) 4,3,2,1 இ) 3,2,1,4 ஈ) 2,3,4,1

18. ஆண்டு, அவள் அன்பின் ஏத்தி,
அழுது இழி அருவிக் கண்ணன் - இவ்வடியில் இடம்பெற்ற நயம் ____________.
அ) சீர் மோனை ஆ) அடி எதுகை இ) சீர் இயைபு ஈ) அடி இயைபு

19. " மாண்டது என் மாயப் பாசம் " - இக்கூற்றைக் கூறியவர் யார்?
அ) வீடணன் ஆ) சவரி இ) குகன் ஈ) சீதை

20. ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர்?
அ) ஜி.யு.போப் ஆ) கோல்மன் பார்க்ஸ் இ) வீரமாமுனிவர் ஈ) என். சத்தியமூர்த்தி

21. பாரசீகத்தின் மிகச்சிறந்த கவிஞர்களுள் ஒருவரான ரூமி பிறந்த ஆண்டு __________.
அ) 1710 ஆ) 1007 இ) 1207 ஈ) 1607

22. ரூமியின் மஸ்னவி _____ பாடல்களைக் கொண்டது. அ) 52,600 ஆ) 15,600 இ) 25,600 ஈ) 1,600

23. ' விருந்தினர் இல்லம் ' கவிதை உணர்த்துவது.
அ) இன்பம், துன்பம் எல்லாமே நாம் விரும்பியே நம்மை வந்தடைகிறது.
ஆ) எல்லாவற்றையும் வேறுபடுத்தி ஏற்றுக் கொள்ள வேண்டும்.
இ) வேண்டியது வேண்டாதது எல்லாமே நாம் விரும்பாமலே. நம்மை வந்தடைகிறது.
ஈ) எல்லாவற்றிலிருந்தும் நல்லவற்றைக் கற்றுக்கொள்ளும் பண்பாடு வளர வேண்டும்.

24. ' தாகங்கொண்ட மீனொன்று ' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்தவர் __________.
அ) கோல்மன் பார்க்ஸ் ஆ) ஆர். கிருஷ்ணமூர்த்தி இ) எஸ். ராமமூர்த்தி ஈ) என். சத்தியமூர்த்தி

25. ' தமிழர் உணவு ' என்ற நூலை இயற்றியவர்?
அ) பூம்மணி ஆ) சி.மணி இ) உ.வே.சா. ஈ) பக்தவத்சல பாரதி

26. கணவனும் மனைவியும் இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டம் ___________.
அ) மணந்தகம் ஆ) குடம்பை இ) தன்மனை ஈ) குடும்பு

27. தொல்காப்பியம் 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களை ___________ எனக் குறிப்பிடுகிறது.
அ) கூடங்கள் ஆ) பள்ளிகள் இ) வாழிடங்கள் ஈ) வயல்கள்

28. தற்காலிகமாகத் தங்குமிடம் _____ அ) மணந்தகம் ஆ) தன்மனை இ) நும்மனை ஈ) புக்கில்

29. ' தாயமுறை ' - பொருத்தமான கூற்றைத் தேர்க.
அ) கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்க்கை நடத்துவது
ஆ) பெண் திருமணத்திற்குப் பிறகும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்துவது
இ) திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்தல்
ஈ) பெண் திருமணத்திற்குப் பிறகு தன் கணவனின் இல்லத்தில் வாழ்க்கை நடத்துவது

30. ' நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மணம் கழிக ' - இவ்வடிகள் உணர்த்தும் செய்தி __________.
அ) திருமண நிகழ்வு ஆ) சிலம்புகழி நோன்பு இ) வளைகாப்பு நிகழ்வு ஈ) வதுவை நோன்பு

31. " மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே " - இவ்வடி இடம்பெற்ற நூல் __________.
அ) கலித்தொகை ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) குறுந்தொகை

32. அருமை+கானம் = புணர்ச்சி விதி தருக.
அ) ஈறுபோதல், முன்னின்ற மெய் திரிதல்
ஆ) உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
இ) ஈறுபோதல், இனமிகல் ஈ) ஈறுபோதல், இனமிகல், அடியகரம், ஐயாதல்

33. பொலிந்தான் - இச்சொல்லைப் பகுக்கும் முறை __________.
அ) பொலி +த்(ந்) +த்+ஆன் ஆ) பொலிந்து +ஆன் இ) பொலி +த் + த் +ஆன் ஈ) பொலிந்து +த் +ஆன்

34. நேர்வழி விரிந்த குடும்ப முறையைப் பாடிய பெண்பாற் புலவர் __________.
அ) ஒக்கூர் மாசாத்தியார் ஆ) வெள்ளிவீதியார் இ) ஔவையார் ஈ) காவற்பெண்டு

35. சங்கச் சமூகம் __________ என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்தது.
அ) தனிமனிதன் ஆ) சமூதாயம் இ) குடும்பம் ஈ) துறவு

36. ' வீடணன் ' பற்றிய செய்திகள் இடம்பெறும் காண்டம்?
அ) யுத்த காண்டம் ஆ) கிட்கிந்தா காண்டம் இ) ஆரண்ய காண்டம் ஈ) அயோத்தியா காண்டம்

37. " காக்கை குருவி எங்கள் ஜாதி " என்று பாடியவர்?
அ) பாரதிதாசன் ஆ) கம்பர் இ) பாரதியார் ஈ) ஔவையார்

38. வேலிகள் அவன் அன்பிற்கு இல்லை __________ யாருக்கு?
அ) சுக்ரீவன் ஆ) இராமன் இ) குகன் ஈ) வீடணன்

39. " நான் உன்னுடைய ஏவலுக்குகேற்ப பணிபுரிவன் " என்று கூறியவன் யார்?
அ) வாலி ஆ) குகன் இ) சடாயு ஈ) இராமன்

40. " எனக்கும் மூத்தோன் " எனக் குகனை ஏற்றவன் யார்?
அ) இராமன் ஆ) பரதன் இ) இலக்குவன் ஈ) தசரதன்